**தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்**
நாகப்பட்டினம் மாவட்டம்

அன்புடையீர் வணக்கம்!

கீழ்கண்ட செய்தியினை தங்கள் மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் கேட்டுகொள்கிறேன்.

*********

## தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக நிறுவன நாள் விவசாயப் பெருவிழா மற்றும் விவசாயிகள் கருத்தரங்கம்

நாகப்பட்டினம், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் 14 வது நிறுவன நாளை முன்னிட்டு மீன்வளப் பல்கலைக்கழகமும் வேளாண்மை அறிவியல் நிலையமும் இணைந்து "**விவசாயப் பெருவிழா மற்றும் விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி"** 18.06. 2025 அன்று பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்பட்டது. இவ்விழாவினை தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் நா. பெலிக்ஸ் அவர்கள் தலைமையேற்று நடத்திவைத்தார். அவர்தம் உரையில் மீன்வளத்தில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்திற்காக பல்கலைக்கழகத்தின் கல்லூரிகள், இயக்குநரகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், தொழிநுட்பக் கல்லூரிகள், மீன்வளர்ப்பு காப்பகங்கள், பயிற்சி நிலையங்கள் ஆகியவை தற்போது 13 மாவட்டங்களில் திறம்பட செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது, இவற்றின் மூலம் விவசாயிகளுக்கு கிப்ட் திலேப்பியா மீன் வளர்ப்பு, அயிரை மீன் வளர்ப்பு, விரால் மீன் வளர்ப்பு, பனையேறி கெண்டைமீன் வளர்ப்பு, வாவ்வல் மீன் வளர்ப்பு, குறை உவர் நீரில் கொடுவா மீன்வளர்ப்பு மற்றும் அவற்றிற்கான மீன் குஞ்சுகள் உற்பத்தி, மீன் உணவு உற்பத்தி, மீன் நோய் கட்டுபாடு ஆகியவற்றில் தொழில்நுட்ப பயிற்சிகளும் திறன் வளர்ப்பு பயிற்சிகளும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன என்று கூறினார். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஹைதராபத்தில் அமைந்துள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் பத்தாவது மண்டல இயக்குநர் முனைவர் ஷேக். நா. மீரா அவர்கள் கலந்துகொண்டு கண்காட்சியினை தொடக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இவ்வுரையில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் வேளாண்மை மற்றும் உணவு உற்பத்திக்கான வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, மீன்வளர்ப்பு ஆராய்ச்சியில் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றது என கூறினார். நன்னீர் மீன் வளர்ப்பு, உவர் நீர் மீன் வளர்ப்பு, கடல் மீன் வளர்ப்பு ஆகியவை உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பில் முக்கிய பங்காற்றி வருகின்றது, தற்போது வேளாண்மைக்கான உள்நாட்டு மொத்த உற்பத்தியில் தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு ஆகியவை முக்கிய கூறுகளாக இருக்கின்றது, இவற்றின் மூலமே கூடுதல் வருவாய் கிடைக்கிறது எனவும், பருவநிலை மாற்றத்திற்கு உட்பட்டு கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு ஆகியவை மேற்கொள்ள சிந்தனைகள் உருவாக்கப்படவேண்டும், புறக்கடை மீன் வளர்ப்பு மாதிரி பண்ணையத்தை உருவாக்கவேண்டும், செயற்கை நுண்ணறிவுடன் கூடிய அலைபேசி செயலியை மீன்வளப் பல்கலைக்கழகத்தில் உருவாக்க வேண்டும், வரும் பத்தாண்டு காலத்திற்கு மீன்வளத்தில் தொலைநோக்கு திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மீன் தீவன உற்பத்தி ஆலை நிறுவுவதற்கு 50 % நிதி அளிப்பதாக கூறினார். விழாவின் இறுதியில் விவசாயிகளுக்கு அலங்கார மீன் குஞ்சுகள், கூட்டு மீன் குஞ்சுகள், பாக்கு மீன் குஞ்சுகள், கோழி குஞ்சுகள், ஆடு குட்டிகள், கண்காட்சியில் பங்கேற்ற மதிப்புக்கூட்டு பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார். முன்னதாக தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பா. பத்மாவதி அவர்கள் வரவேற்புரையாற்றினார். மேலும் இக்கருத்தரங்கில் காலநிலைக்கேற்ற பாரம்பரிய நெல் இரகங்கள் சாகுபடி தொழில்நுட்பங்கள், தோட்டக்கலைப் பயிர்களில் உயர் விளைச்சலுக்கான நவீனசாகுபடி தொழில்நுட்பங்கள், கால்நடை வளர்ப்பு மூலம் வருமானத்தை இரட்டிப்பாக்குதல், காலநிலைக்கேற்ற மீன்வளர்ப்புத் தொழில்நுட்பங்கள், வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த உற்பத்தி பொருட்களில் மதிப்புக்கூட்டுதல் தொழில்நுட்பம் ஆகியவை பயிற்சியளிக்கப்பட்டன. காரைக்கால் வேளாண்மை அறிவியல் நிலைய முன்னாள் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆர். ரெத்தினசபாபதி, காரைக்கால், பண்டித ஜவகர்லால் நேரு வேளாண்மைக் கல்லூரியின் தோட்டக்கலை பேராசிரியர் முனைவர் வி.சுந்தரம், கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி

நிலையத்தின் தலைவர் முனைவர் சி. சுரேஷ், தலைஞாயிறு டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப் பேராசிரியர் முனைவர் பி. யுவராஜன், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் ஆ.மதிவாணன் ஆகியோர் தொழில்நுட்ப பயிற்சி அளித்தனர். இவ்விழாவில் மீன்வளப் பல்கலைக்கழக உயர் அதிகாரிகள், பேராசிரியர்கள், அலுவலர்கள் உள்ளிட்ட 175 க்கும் மேற்பட்ட விவசாயிகள், பண்ணை மகளிர், தொழில் முனைவோர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இறுதியாக வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ. கோபாலககண்ணன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். இக்கருத்தரங்கில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுனர்கள் முனைவர் கோ.சந்திரசேகர், திரு.யூ.ஹினோ பர்னான்டோ, முனைவர் வே.கண்ணன், முனைவர் ஆ.மதிவாணன், திரு. க. ரகு, தொழில்நுட்ப அலுவலர் திரு. வீ.ஞானபாரதி, பண்ணை மேலாளர் திரு. ரெ. வேதரெத்தினம், கணினி அலுவலர் திருமதி கோ.ரம்யா உதவியாளர் திருமதி. பி. சுமதி, திறன்மிகு பணியாளர்கள் திரு. ந.சாமதுரை, திருமதி ரா.லாவண்யா ஆகியோர் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்தனர்.